OS No. 59/2016

வா.சா.1 - ராஜசுந்தரம்

நாள்: 30.03.2023

**<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வா.சா.ஆ. 1ல் எழுதியவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் சாட்சியுமான என்ற வார்த்தையை நான் அழித்துள்ளேன் என்றால் எழுதியவர் தான் அழித்தார். வா.சா.ஆ.1ல் வாங்கியது போல் வா.சா.ஆ.5 ல் நான் இறந்த வீரமணியின் கைரேகையை வாங்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் முத்திரைவில்லை மீதுள்ள கையெழுத்திற்கும் அதற்கு கீழ் உள்ள கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. அதேபோல் மேலே உள்ள வாசகங்களுக்கும் தொகை எழுதப்பட்டதற்கும் கையெழுத்து வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 மற்றும் 4 ல் இறந்த வீரமணியின் கையெழுத்து வித்தியாசமாக உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ல் கையெழுத்து வாங்கியது போல் வா.சா.ஆ.4 ல் தமிழ் கையெழுத்து வாங்கவில்லை என்றால் அவர் தான் எழுதவில்லை. வா.சா.ஆ.3 ஐ புளூ மையிலும் வா.சா.ஆ.4 ஐ கருப்பு மையிலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் வீரமணி இரண்டு பேனாக்கள் வைத்திருந்தார். வா.சா.ஆ.5 ம் ரொக்கம் பெற்றுக் கொண்ட விபரம் என்ற இடத்தில் கருப்பு மையில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் முத்திரைவில்லை மீதுள்ள கையெழுத்திற்கும் அதற்கு கீழ் உள்ள கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ல் தமிழில் அச்சடிக்கப்பட்டு தொகை ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் இறந்த வீரமணி தான் எழுதினார். அந்த ஆவணத்தில் உள்ள இடம் பண்ருட்டி என்பதும் ஆங்கிலத்தில் தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் 3 முதல் 5 ஆவணங்களில் உள்ள கையெழுத்துகளை வா.சா.ஆ 2 ஐ பார்த்து மோசடியாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் 1வது பத்தி 11வது வரியில் சாட்சிகள் முன்னிலையில் இட்டு தந்தார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ல் சாட்சிகள் முன்னிலையில் தான் வா.சா.ஆ.1 ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் ஒரு சாட்சி கையொப்பம் தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 தேதிக்கு பிறகு 6 மாதம் 27 நாட்கள் கழித்து தான் தாவா தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இடையில் சமாதானம் பேச்சு வார்த்தை நடைப்பெற்றதால் கால தாமதம் ஆனது. இந்த விபரத்தை நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எத்தனை முறை வீரமணியிடம் பணத்தை திருப்பி கொடுக்கும்படி கேட்டேன் என்று வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால்

சரிதான். நான் 2015 வரை வருமான வரி செலுத்தியுள்ளேன். நான் பலருக்கு கடன் கொடுத்தது சம்பந்தமாக நோட்டு புத்தகம் பராமரிப்பதில்லை. வா.சா.ஆ.3 முதல் 5 ஆவணங்கள் அச்சடிக்கப்பட்ட பாரங்கள் என்றால் சரிதான். இறந்த வீரமணி என்னிடம் 03.01.2013 ம் தேதி தான் ரூ.90,000/- கடன் வாங்கினார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை விபரம் எனக்கு தெரியும். இறந்த வீரமணி கடனை திருப்பி செலுத்திவிட்டதால் தான் அவரிடத்தில் பணத்தை திருப்பி கொடுக்கும் படி கேட்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் 3 முதல் 5 ஆவணங்களை ஜோடித்து தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே,பைசல் ஆன கடனுக்கு பிரதிவாதிகள் பொறுப்பல்ல என்றால் சரியல்ல.